# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத் 2. | 1911-௵ மார்ச்சு௴ 1உ | நெ. 3.

## ஜீரணமும் ஜீரண உருப்புகளும்.

[பிப்ரவரி மாதத்திய வைத்தியபோதினி 27-ம் பக்கத் தொடர்ச்சி.]

குண்டிக்காய்—மூத்திரக் குண்டிக்காய்கள், மூத்திர பிண்டங்கள் அல்லது பிருக்கங்கள் என்றும், ஆங்கிலத்தில் (Kidneys—கிட்னீஸ்) என்றும் சொல்லப்படும். குண்டிக்காய் என்பது முள்ளந்தண்டுக்கருகே இருபக்கத்திலும் 4–5 அங்குல நீளமுள்ளதாயும், 1-அங்குலம் தளமுள்ளதாயுமிருக்கும். இதில் எப்போதும் கொழுப்பு ஒட்டிக்கொண்டிருக்கும் இது பார்வைக்கு மாம்பருப்பைப்போலவிருக்கும். 3 முதல் 5-அவுன்ஸ் எடை இருக்கும். இதை அறுத்துப்பார்த்தால் உட்பக்கத்தில் இரண்டு வித பதார்த்தங்கள் காணப்படும், ஒன்று இரத்த நரம்புகளால் ஏற்பட்டு சிவந்தும், மற்றொன்று குழல்களால் ஏற்பட்டு மொக்குகள்போலவுமிருக்கும். அந்த மொக்குள் முனைகள் உள்நோக்கி, சிறிய பள்ளங்களில் பதுங்கி யிருக்கும். அம்மொக்குகளுக்கு ஆங்கிலத்தில் (Cones—கோன்ஸ்) என்றும், முனைகளுக்கு (Papillæ—பாபிலீலி) என்றும் பேர். இம்முனைகளில் சிறிய துவாரங்கள் காணப்படும். அத்துவாரங்களிலிருந்து சதா மூத்திரம் சுரந்துகொண்டேயிருக்கும். இப்படியாக ஏற்பட்டுள்ள குண்டிக்காயானது மூத்திரத்திலுள்ள அமுரியைப்பிரித்துவிடுவதினாலே இரத்தம் சுத்தியாகின்றது. இன்னும் ஒவ்வொரு குண்டிக்காயினின்றும் ஒவ்வொரு குழலாய் இரண்டு குழல்கள் கிளம்பி அடிவயிற்றின் நடுவே கிடக்கும் ஜலப்பையை நாடியோடி அதினுடனே பொருந்துகின்றன. அக்குழல்களின் வழியாய் அமுரி சொட்டுச்சொட்டாய் இறங்கி ஜலப்பையை நிரப்பும், அதற்கு மூத்திரகுண்டிக்காய்க் குழல் (Uriter—யூரிடர்) என்று பேர். இது சற்றேறக்குறைய $1\frac{1}{2}$-அடி நீளமுள்ளது.

மேலேசொல்லிய ஜீரண உருப்புகளின் தொழிலாவது, உடலை போர்ப்பதற்குப்புசிக்கப்படும் போஜன பதார்த்தங்கள் பல்லுகளால் மெல்லப்பட்டு உமிழ்நீருடன் கலந்துவிழுங்க அப்போது மிடற்றுக்குழல் வழியாய் இரப்பைக்குட்செல்லும், அந்தப்பையில் அவைகள் நசுக்கப்பட்டு திரண்டு வரவர அந்தப்பையின் உட்பக்கத்திலிருந்துண்டாகும், புளிப்புள்ள நீருடன் கலந்து, நறைநிறமான பாகமாகச்சமைந்து, துணைக்குக் கிக்குட்சென்று, பித்தநீருடனேயும் கணயநீருடனேயும் கலந்து, பால் நிறமாகவும் மலமாகவும் மாறுதல் அடைந்து சிறுகுடலுக்குள் செல்லும், அதிலுண்டாகின்ற சிறுகுழல்கள் அந்நரசத்தைமட்டும் உருஞ்சி, இதைக் காறைஎன்புக்குப்பின்னாலிருக்கிற ஒரு நாளத்துட்செலுத்தும். அந்த நாளத்தின் வழி சுவாசப்பை நாளத்துட்செல்லும். இங்ஙனம் சுவாசக் காற்றுப்பட்டு இரத்தமாக மாறிவிடும். மலமானது பெருங்குடலுக்குட் சென்று மலவாயில் வழியாகவெளியிற்கழிந்துவிடும்.

A. பெரியமூளை, berebrum. B. சிறியமூளை, cerebellum. C. முள்ளந் தண்டுக் கொடியின் சிகரம், Medella oblongata. D. முள்ளந் தண்டுக் கொடி; Spinal Marrow. E. கண்ணு Eye-Ball. 1, மேல்வாய் Upper Jaw. 2, கீழ்வாய் Lewer Jaw. 3, நாக்கு Tongue, 4, மூக்குத்துவாரங்கள், Nostrils. 5, அன்னவாகி தொண்டைக்கடியிலிருந்து இரைப்பைக்குப்போகிற குழல், Esephagus. 6. குரல்வளை, The Laryux, இதற்கு அடியிலிருப்பது சுவாஸக்குழல், Wind pipe. 7, உமிழ்நீர்க் கோளம், Partoid Gland. 8. நாக்குக்கடியிலிருக்கிற உமிழ்நீர்க்கோளம், Sublingual gland. 9, அன்னசயம், இதுவே ஆமாசயம், தீனிப்பை, இரைப்பை, The Stomach இதில் உண்ணுகிற பதார்த்தங்கள் வந்து விழுகின்றன. 10, 10 யகிர்தகண்டம், இதுவே ஈரல் அல்லது கல்லீரல், The liver பித்தத்தைச் சுரப்பிக்கிற ஓர் உறுப்பு. 11, பித்தாசயம் இதுவே பித்தப்பை The gall Bladder. இதில் பித்தநீர் இருக்கும். 13, அக்கினியாசயம் இதுவேதுணைக்குக்ஷி,Duodenum. 14 கணையம்,Pancreas. 15, 15, 15, 15, மலாசயம், பெருங்குடல், The Large intestines, இந்தக்குடல் மத்தியில் பாம்புபோல் வளைந்திருக்கிறது சிறுகுடல், இதுவே பக்குவாஸயம், பாகாஸயம். The small intestines. 16, சிறுகுடல் பெருங்குடலோடு சேருமிடம், Gæcum. 17, பெருங் குடல் ஊர்த்த முகம் Ascending colon. 18, பெருங்குடல் குறுக்கு, Transverse colon. 19, பெருங்குடல் அதோ முகம், Descending colon. 20, குதம், Rectum. 21, பீலிகம், இதுவே மண்ணீரல், கறுப்பீரல், செவ்வொட்டி, Spleen. 22, கழுத்து முள்ளெலும்புகள், Cervical Vertebræ.



அங்க அமைப்பின் அதிசயம்.



# பிள்ளைகளுக்குப் பாலூட்டுங்கிரமம்.

தாய்மார்களின் மார்பில் சுறக்கும் பாலில் என்னென்ன வஸ்துக்களிருக்கின்றன என்பதை தெரிந்துகொள்வோம்—

தாய்மார்களே நீங்கள் தத்தம் பாலர்களுக்கு ஊட்டும் பாலானது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சஞ்சீவிக்கொப்பாயிருக்கிறது. தேக வளர்ச்சிக்கு அவசியமான சர்க்கரை, நெய், ஜலம், சொற்பஉவர்ப்பு, சொற்பஅயம் ஆகிய இவைகளே அப்பாலிலிருக்கின்றன. தேகத்திலுள்ள ஒவ்வொரு அவயமும் வளரவும், ஜீவாக்கினி நிலைபெற்றிருக்கவும் மேற்சண்ட அற்புத அவுஷதத்தையுண்டாக்கின கடவுளின் கிருபா கடாக்ஷத்தின் பெருமையையும், அருமையையும் நாமென்னென்று சொல்லலாம். எவ்வகையாக துதிசெலுத்தி நன்றிகூறலாம். தங்கள் அருமைப்பாலர்களுக்காக அதிக கிருபையுடன் தங்கள் இரத்தத்தினின்றே யிப்பாலானது சித்தப்படுத்தப்படுகின்றது.

இன்னும் அந்தப்பாலானதுதாங்கள் நினைத்த தக்ஷணமே தங்கள் பாலகருக்குக் குடிப்பாட்டும்படியாக தங்களிடத்திலேயே தடை தவக்க முதலியவைகளின்றிச்சர்வசித்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது. தங்கள் பாலகர்கள் தினேதினே வளர்ந்து செழித்துப்புஷ்டியாகி சுகமாயிருப்பதற்காகவே இராப்பகலென்னும் விகற்பமின்றித்தாங்கள் பால்கொடுத்து வருகின்றீர்கள், சுருக்கிச்சொல்லில் தங்கள் குழந்தைகள் சரீரசௌக்கியத்துடன் வளரவேண்டுமென்பதே தங்கள் பூரணகோரிக்கையும் நம்பிக்கையுமாம், ஆகையால் பால் குடிப்பாட்டுங்காலங்களில் தாங்கள் கவனிக்கவேண்டிய சிலவிதிகள் பின்னெழுதப்படுமாகையால் அவைகளைச்சற்றுகவனித்து நடந்துகொள்வீர்களென்பதே நமது பிரார்த்தனை. தாய்மார்கள் பிள்ளைக்குப்பாலூட்டும்போது எவ்வித விசனம், கவலை, பயம், திகில் முதலியவையில்லாதவர்களாய்க்கூடிய வரையில் மனக்களிப்பு, திருப்தி முதலியவையுள்ளவர்களாக இருக்கவேண்டும், ஏனெனில் மனதிலுண்டாகும் விசனம், கவலை, பயம், திடுக்கம் முதலியவைகளால் அச்சமயங்களிலூட்டும் பாலில் தோஷமுண்டாகி அப்பால் குழந்தைக்கு அஜீரணம், மந்தம், பேதி, சுரம், வலிப்பு முதலிய ரோகங்களையுண்டாக்கி அபாயத்துக்கேதுவாக்கிவிடும் என்பதே காரணம். (இன்னும் வரும்.)

பூ. பு. செல்லக்குமார கவுண்டர்,
கணக்கன்பட்டி.

## பிராணிகளின் போஷணை.

வியாதிப்பட்ட பிராணிகளுக்கு வியாதியின் இயல்புக்குக்குத் தகுந்தபடி ஆறுமணி நேரத்திற்கு ஒரு முறையாவது கஞ்சி கொடுக்க வேண்டும். அப்பிராணிக்கு வைத்த ஆகாரத்தை அது உண்ணாமலிருந்தால் ஆகாரத்தை உடனே எடுத்துவிடவேண்டும். தளர்ச்சியும், ஆயாசமும், உண்டாகக் கூடிய சில வியாதிகளில் அதிசீக்கிரத்தில் ஜீரணமடைந்து சரீரத்தில் சேரக்கூடிய மேன்மையான ஆகாரத்தை கொடுக்க வேண்டும். சிலவேளைகளில் வியாதி சொஸ்தமடையும்போது பசியதிகமாயிருக்கும். அப்பொழுது கால் நடைகளுக்குச் சரியான ஆகாரத்தைக் கொடுத்து அஜீரணமாகாமல் பாதுகாக்கவேண்டும். கால்நடைகளைக் கட்டிவைக்கும் கொட்டங்களில் சரியானபடி காற்ரோட்டம் இருக்க வேண்டும். கொட்டங்களில் சாணிமுதலான அசுத்தங்களை அப்புறப் படுத்தி விடவேண்டும். வியாதிப்பட்ட பிராணிகளிருக்கும் இடத்தில் அரைமணி நேரமாவது வெய்யில் படவேண்டும். சூரிய ஒளியினால் ரத்தம் விருத்தியடைகிறது. துர்க்கந்தம் பறந்துபோய்விடுகிறது. சுகமான மல ஜல விஸர்ஜனங்களுக்கு அனுகூலமான ஹேது உண்டாகிறது. விஷக்கிருமிகள் நாசமடைகின்றன. படுக்கை விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். பிராணிகள் படுத்துப் புரளுவதற்கு தகுந்த விதமாய் வைக்கோல்படுக்கை அமைக்கவேண்டும். குளிர்ந்த காற்று அடிக்கும் போதும், மழை பனி பெய்யும் போதும், வியாதிப் பட்ட பிராணிகளிக்கு கம்பளிப்போர்வை அவசியம். சில வியாதிகளில் கால் நடைகள் ஒரு பக்கமாகவே படுக்கும். அவைகளுக்கு ஸௌகரியமானபோது எழுந்திருக்கக் கூடிய சக்தியிருந்தால் அப்படிப்படுப்பதைத் தடுக்கக்கூடாது.

(கிருஷிகன்.)

## பிதாமார்களுக்கோர் விண்ணப்பம்.

பிள்ளைகளைப்பெற்ற பாக்கியவான்களே! தாங்கள் ஒவ்வொருவரும் புண்ணியவசத்தால் தத்தமக்கு இகபர சௌக்கியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஹேதுவாகிய புத்திரர்களை அடையப்பெற்றது ஜென்மாந்திர புண்ணியவசமே, அப்படிக்காகிய புத்திரர்களை யௌவனப்பருவம் வரையில் "குப்பைப் பயிரைக் கூரையிலேற்றுவதுபோல" உயிர்க்கு ஊன்றுகோலாகிய கல்வியை நன்குபயிலச் செய்வித்து, அக்கல்விக்கேற்ற நல்லொழுக்கங்களிலும் நடைபெறும்படிக்குச் செய்விக்கவேண்டியதானது பெற்றோர்களின் கடமையதாகும், இந்த அஸ்திவாரக் கல்வியைக் கைவிட்டுச் சிலர் தத்தம் பிள்ளைகளுக்குக் கல்வியினறிவை யூட்டாது, பாலையும் பழத்தையுமூட்டி, ஆபரணாதிகளைப் பூட்டி, புஷ்ப

மாலைகளைச்சூட்டி, பற்பலவேடிக்கை விநோதங்களைக்காட்டி, காமவலைக் குள் மாட்டி, அழகிய வடிவத்தை வாட்டிப் புத்திரர்களையும் தங்களையும் நரகத்திற்கு ஆளாக்குகின்றார்கள். அந்தோ! அது மட்டோ? புத்திரர் களுக்கு ஆதாரமென்றுதேடிவைத்த செல்வத்தையும் தமது துன்மார்க்கச் செய்கையால் போக்கிக் கையினில் ஒட்டைத் தூக்கி கோவணம் ஒன்று தான் பாக்கியென்று திரியும்படியும் செய்கின்றார்கள். இவ்விதம் செய் வித்தல் புத்திமான்களின் தன்மையல்ல பின்னர் யாது செய்வித்தல் வேண்டுமென்றால் "தந்தைமகற்காற்று நன்றியவையத்து முந்தியிருப்பச் செயல்" என்னும் திருக்குறள்வாக்கியப்படி தம் புத்திரர்களை ஒவ்வொரு கல்விச்சங்கத்திலும் நாயகமணியாக அங்கீகரிக்கும் படியாயுள்ள கல்வி, அறிவு, நல்லொழுக்கமுதலிய சற்குணங்களை உடையவர்களாக்குவிக்க வேண்டும் அங்ஙனம் செய்விக்கும் பிதாவே பிதா மற்றவர்களெல்லாம் விர்தா, புத்திமான்களே! "கல்வியினூ உங்கில்லைச் சிற்றுயிர்க்குற்ற துணை," "ஒழுக்க முயர் குலத்து நன்று," என்னும் ஆபத் வாக்கியங் களைக்கொண்டு தங்கள் தங்கள் புத்திரர்களுக்கு நிரம்பிய கல்வியையும் நல்லொழுக்கத்தையும் பரவச் செய்வீர்களென்று கேட்டுக்கொள்ளு கிறேன்,

சிறுபிள்ளைகளுடைய மனம் இளக்கமாயும் மிருதுவாயுமிருப்பதால் இளமைப்பருவத்தில் அவர்களுக்குப்போதிக்கும் கல்வியும் சுகுணங்க ளும் அவர்களுடைய புத்தியில் பதிந்து நன்றாய் வேரூன்றிக்கொள்ளும், பெரியவர்களானபின்பு போதிப்பதினால் பிரயோசனமில்லை. பொன் வெள்ளி முதலிய பஞ்ச லோகங்களையும், மெழுகு, ஸ்படிகம் முதலிய வைகளையும் உருக்கி இளகி இருக்கும்பொழுது வேண்டிய விக்கிரகங் களையும் நகைகளையும் பாத்திரங்களையும் செய்துகொள்வதுபோலவும், பச்சைமண்ணைக் கொண்டு பலகடாதிகள் செய்வதுபோலவும், உழுது திருத்தி இளக்கமாயிருக்கிற நிலத்தில் வேண்டியதானியங்களை விதைப் பதுபோலவும், இளமைப் பருவத்திலேயே வித்தையையும் நல்லொழுக் கத்தையும் கற்பிக்கவேண்டும். நற்குணமும் தூர்க்குணமும் சிறுபிராயத் திலேயுண்டாகித் தேகத்துடன் வளருகிறபடியால் பயிரிட்டவன் அடிக் கடி களைபிடுங்கிச் சர்வஜாக்கிரதையாகப் பயிரைக் காப்பாற்றுவதுபோல் சிறுவர்களுடைய புத்தியில் தூர்க்குணமாகிய களைகள் வளராதபடி தாய் தந்தையர்கள் எப்போதும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். சிறுபிள்ளை களுடைய ஒவ்வொருவார்த்தையையும் செய்கைகளையும் நடைகளையும் கவனித்து அவர்களிடத்தில் நன்மையைக்காணும்பொழுது பிரியத்தைக் காட்டியும் தீமையைக்காணும்பொழுது தகுந்தபுத்திசொல்லியும் நயமும்

பயமுமாய்ப் பிள்ளைகளை வளர்க்கவேண்டும். பிள்ளைகளை அதிகமாய்க் கண்டிப்பதனால் அவர்கள் பெற்றோர்களுக்குப் பயந்து பலபொய்களைச் சொல்லவும், கபடம் வஞ்சகம் முதலான துர்க்குணங்களைக் கற்றுக்கொள்ளவும் ஆஸ்பத முண்டாவதுந் தவிர பெற்றோர்களிடத்தில் வெறுப்பு முண்டாகுமானதால் பிள்ளைகளை அதிகக்கண்டிப்பு செய்வது தகுதியல்ல. பிள்ளைகள் குற்றஞ்செய்தாலும் அதைப்பொய்சொல்லி மறுக்காமல் உண்மையை ஒப்புக்கொள்ளுவார்களானால் மெய்சொன்னதற்காக அவர்களிடத்திற் பிரியத்தைக் காட்டவேண்டுமேதவிர அவர்கள் செய்த குற்றத்தைப் பாராட்டக்கூடாது. தாய் தகப்பன்மார்கள் நல்வழியில் நடந்துகாட்டாத பிள்ளைகளும் துன்மார்க்கத்தில் நடப்பார்களானதால் தாய் தந்தைகள் எப்போதும் புண்ணிய வழியிலேயே நடக்கவேண்டும், இனி விரிக்கிற் பெருகும் சமயம் நேரும்போது விரித்துக் கூறுவாம்.

---

## SHAH JEHAN. ஷாஜிஹான்.

ஷாஜிஹான் என்பவர் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவை அரசாட்சி செய்த ஒரு மொகலாய சக்ரவர்த்தி. இவர் "டாஜ்மஹால்" என்னும் ஒரு சிறந்த கட்டிடத்தைக் கட்டினவர் என்பதைத்தான் அநேகர் அறிந்திருப்பார்கள். ஆனால், அவருடைய ஜீவியசரித்திரத்தையும், குணாதிசயங்களையும் ஊன்றிப்படித்தால், அவருடைய காலத்தில் பிரஜைகள் அவரை அன்புடன் கொண்டாடியதற்கும், பிற்காலத்தார் அவரைச் சிலாகிப்பதற்கும், காரணமான சிறந்த பல குணங்கள் ஷாஜிஹானிடமிருந்தன என்பது தெளிவாகும். இந்திய சரித்திர நூலாசிரியர்களும், ஐரோப்பிய சரித்திர நூலாசிரியர்களும், ஷாஜிஹானைப்பற்றி வேறு விஷயங்களில் அபிப்பிராய பேதங் கொண்டவர்களாயிருந்தாலும், அவர் நடுவுநிலைமையோடும் நீதியோடும் கூடியவர் என்பதைமட்டும் எல்லாரும் ஒரேமனதுடன் அங்கீகரிக்கிறார்கள். மனிதர்களுடைய இயல்பையும், அந்தஸ்தையும் கவனியாமல், எல்லாருக்கும் ஒரேவிதமான நீதியைச் செலுத்துவதில் ஷாஜிஹான் மிகவும் கவனம் செலுத்தும் இயல்புடையவர். இதனால் அவருடைய கீழ் உத்தியோகஸ்தர்கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் நீதி செலுத்துவதில் கவலை கொண்டவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில் நீதி தவறி ஒரு காரியத்தைச் செய்துவிட்டால் தங்களுடைய வேலையும்போய், சக்ரவர்த்தியின் கோபத்திற்கும் பாத்திரமாக வேண்டும் என்பதை அவர்கள் நன்றாய் உணர்ந்தவர்கள். இதனால் ஷாஜிஹானுடைய ராஜ்யம் பெரி

தாயிருந்தாலும், வாரத்தில் இருபது வியாஜ்யங்களுக்குமேல் அவரிடத்தில் விசாரணைக்கு வருவதில்லை. அதுவும் மதசம்பந்தமானதும், வெட்டு, கொலை முதலியவை சம்பந்தமானது மாகவே பெரும்பாலுமிருக்கும். அப்படிப்பட்ட வியாஜ்யங்களை உள்நுழைந்துபார்த்து சாமர்த்தியமாகவே ஷாஜிஹான் முடிவு செய்வார். லஞ்சம், சிபார்சு, முதலியவைகளை எற்றுக்கொள்ளும் ஜட்ஜிகளிடம் ஷாஜிஹானுக்கு அருவருப்பு அதிகம். டெல்லி நகரத்துக் கொத்தவால் ஒரு ஸமயத்தில் ஒரு வியாபாரியிடமிருந்து லஞ்சம் வாங்கி விட்டானும். இந்த ஸங்கதியை அறிந்த ஷாஜிஹான் ஒரு உத்தியோகஸ்தன் மூலமாய் நல்லபாம்பை உயிருடன் அனுப்பி அந்தக்கொத்தவாலைக் கடிக்கும் படிச்செய்வித்தாராம். பாம்புகடித்து அந்தக் கொத்தவால் சிறிது நேரத்திற்குள் இறந்துபோனனும்.

ஷாஜிஹான் அவருடைய காலத்தில் கொள்ளைக்காரர்களை வேரோடழித்தார். இவருடைய காலத்துக்குமுன்பு கொள்ளையும் வழிப்பறியும் ஸர்வ சாதாரணமாயிருந்தன. இவர் அந்தந்த ஜில்லாக்களில் நடக்கும் கொள்ளை, வழிப்பறி முதலியவைகளுக்கு, அந்தந்த ஜில்லாவிலிருக்கும் உத்தியோகஸ்தர்களே உத்தரவாதிகளாக வேண்டுமென்று கட்டளையிட்டார். இதனுல் கீழ் உத்தியோகஸ்தர்கள் அவைகள் நடவாதிருக்கும்படியான முயற்சியைச் செய்தார்கள். ஸூரத்து நகரத்தில் வந்திருந்து வியாபாரம் செய்த உலாந்தக்காரர்களுடைய பொருள்கள் ஒரு இரவில் கொள்ளை போய்விடவே, ஸூரத்து கவர்னர் அந்த வியாபாரிகளுக்கு எற்பட்ட நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று ஷாஜிஹான் அவரைக்கட்டாயப்படுத்திக் கொடுக்கும்படிச்செய்தார். போர்த்துகல் தேசத்துக் கொள்ளைக்காரர்கள் வெகு காலமாக வங்காள நாட்டைக் கொள்ளையடித்தும், ஜனங்களை ஹிம்ஸித்தும்வந்தார்கள். ஷாஜிஹான் அவர்களுக்குக் கொடுத்த கடுந்தண்டனையால் கடைசியில் அவர்கள் வங்காளத்தைவிட்டு ஓடிப்போனர்கள். டேவிட் ஸின்க்லேர், டேயிலர் போன்ற பாரபட்சமுள்ள சில சரித்திர நூலாசிரியர்கள், ஷாஜிஹானுடைய மதப்பற்றும், அவருக்கு கிறிஸ்தவ மதத்திலிருந்த ஒருவித வெறுப்பும், அவர் தமது தகப்பனருக்கு விரோதமாய்க் கலகம் செய்த போது, போர்த்துகல் தேசத்தார் தமக்கு உதவி செய்ய மறுத்ததால் எற்பட்ட கோபமுமே, அவர்களை அடித்துத் துரத்தும்படி சக்ரவர்த்தியைச் செய்தன என்று சொல்லுகிருர்கள். ஆனுல் பாரபட்சமில்லாத யேல்பின்ஸ்டன், கீன், பேர்னியர், போன்ற சரித்திர நூலாசிரியர்களின் கருத்து வேறுவிதமானது.—பிழைக்கும்வழி.

(இன்னும் வரும்).

## சுகாதார மார்க்கங்கள்.

(1) வெளிச்சமும் காற்றோட்டமுமில்லாத வீடுகளையிடித்துப் பெருப்பித்தும் இருட்டறை போலவிருக்கும் வாசஸ்தானங்களையெல்லாம் விசாலப்படுத்தி, தாராளமாய் வெளிச்சமும் காற்றும் உலாவும்படி நிருமாணிக்கவேண்டும். (2) பிரதி தினமும் கழிக்கப்படுகிற குப்பை கூளங்களைக் கொண்டுபோய்ச் சுட்டெரித்துப் போடும்படி நகர்ப் புறத்தில் பெரிய காளவாய்களை யுண்டாக்கவேண்டும். வீடுகளும் தெருக்களும் எப்போதும் சுத்தமாயிருக்கும்படி பார்க்கப் பரிசிலர்களை ஏற்படுத்தவேண்டும். சாலகங்களைச் சுத்திசெய்யவும், துர்நீர்களைத் தங்காதபடி கழுவி விடவும் ஒட்டர்களை அமைக்கவேண்டும். (3) வீடுகளில் ஜன நெருக்கஞ் சேராதபடி இந்திந்த வீட்டில் இத்தனைபேர் தான் வசிக்கவேண்டுமென்று விதி யுண்டாக்கவேண்டும். (4) அசுத்தமும், பூச்சிகளு மலிந்த குளத்துநீரை அப்போதைக்கப்போது சுத்தம் செய்யவேணும். பானத்துக்குதவும் குளங்களை யெல்லாம் சுத்திசெய்து அக்குளங்களை வேலி யடைத்துக் காவல் போடுவது, பானம் பண்ணும் குளங்களில் வஸ்திரம் தோய்த்தலாவது, ஸ்நானம் பண்ணுதலாவது கூடாதென்று சட்டஞ் செய்தல், கிணறுகளைச் சுற்றி ஜனங்கள் சேறுக்கி யசுசி செய்யாதபடி கற்களைப் பாவுதல். (5) நகரவாசிகளில் பெரும்பாலார் சோம்பேறிகளாகவும், தேகாப்பியாசமில்லாமல் திண்ணைகளின்பேரி லுட்கார்ந்து கிழக்கதைகளைத் தொனப்பிக்கொண்டிருக்கிறவர்களாகவு மிருக்கிறதைக் கவனித்து, சில சிலம்ப அரங்கங்களையும், தேகாப்பியாசத்திற்கேற்ற விடுதிகளையும் அமைத்து, சகலரையும் தேகாப்பியாசஞ் செய்ய உற்சாகப்படுத்தவேண்டும். (6) பெரும்பாலவர் பட்டணத்தில் ஜன நெருக்கமான விடங்களிலேயே இருந்துகொண்டு அசுத்த காற்றையே சுவாசித்துக் கொண்டிருக்கிறபடியால், அவர்கள் காலையிலும் மாலையிலும் போயுலாவத்தக்கதாக ரமணீயமான சிங்காரத் தோட்டங்களை யுண்டாக்குதல், அவைகளில் விதவிதமான புஷ்பச் செடிகளையும், மரங்களையுங் கொண்டுவந்து நாட்டுதல். (7) இவைகளன்றி நகர வாசிகளுக்குப் பொதுப்பட அநேக சுகாதார விதி விலக்குகளைச் சாஸ்திர ரீதியாய் எடுத்துப் பிரசித்தப்படுத்தி, ஒவ்வொருவரும் அவ்விதி விலக்குகளை யனுசரித்து நடக்கும்படி யேற்பாடு செய்தல் அவைகளாவன:—

"விருக்ஷங்களி லநேகம் அநேக நூறுவருஷ காலம் ஜீவன் பெற்றிருக்கின்றன. இத்தேசத்திலும், பிறதேசங்களிலும் ஐந்நூறு, அறுநூறு, ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களாய் சாகாமலிருக்கிற அநேக மரங்களிருக்கின்றன. இந்நாட்டில் ஆலவிருக்ஷம் மூவாயிர வருஷமிருப்பதாக அறிவாளிகள் கருதுகிறார்கள். மேலே நாடுகளில கர்வாலி, சிமையிலந்தை யிலைவகள் ஆயிரம், ஆயிரத்தைந்நூறு வருஷங்களாய் நிலைத்திருப்பனவாய்ச் சொல்லப்படுகின்றன."

பக்ஷிகளும் மிருகங்களு மவ்விதமே அநேக வருஷகாலம் ஜீவித்திருக்கின்றன. நமது நாட்டில் அஞ்சுக மென்னப்பட்ட கிளிப்பிள்ளைகள் ஐந்நூறு வருஷகாலம் சுகமாயிருப்பதாய்த் தெரியவருகிறது. இதனால் தான் அதற்கு சுகம், அஞ்சுகம், என்னும் பெயர்கள் வந்தன போலும். அம்சமென்கிற அன்னப்பறவைகளும் முந்நூறு வருஷமிருக்கிறது. கழுகுகள் ஐந்நூறு வருஷகால மிருக்கின்றன. காகங்களும் பல வருஷங்கள் ஜீவித்திருப்பதாய்க் கேள்விப்படுகிறோம்."

"மிருகங்களில் சிங்கம் நூறு வருஷத்துக்கதிகமாய் ஜீவிக்கின்றது. ஒட்டகங்கள் நூற்றுக்கு மேற்பட்ட வருஷம் ஜீவனோடிருக்கின்றன. இலங்கைப் பிரதேசத்திலுள்ள யானைகள் ஐந்நூறு வருஷங்களிருக்கின்றன. அமெரிக்காவில் அன்னிபால் என்கிற யானை எழுநூறு வருஷமிருப்பதாய் சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஜலத்தில் வசிக்கும் ஆமை இருநூற்றிருபது வருஷ மிருந்ததாய் ஒரு ஆங்கிலப் புலவர் சொல்லுகிறார்."

"இப்படி மனுஷனுக்குக் கீழ்பட்ட தாவரங்களும், மிருகங்களும் அநேக நூறுவருஷ காலம் ஜீவனோடிருக்க எண்ணரிய பிறவிகளி லியாதினு மேலான இந்த மானிடப்பிறவிமட்டும் ஒரு நூறுவருஷ காலம் ஜீவனோடிருப்பதும் துர்லபமாய் முடிந்து, காயாயிருக்கும்போதே யுதிர்ந்து போகக் காரணமென்ன? உலகத்திலே நூறு வயதுக்கு வந்தெட்டின புண்ணிய புருஷர் எத்தனை பேருண்டு? மனுஷர்களில் அரைவாசி பேர் பத்து வயதுக்குள் இறந்து போவதாகவே ஆயுள்வேத பண்டிதர் கூறுகிறார்கள்."

"முகாந்தரமென்ன? தங்கள் சுகத்தைத் தக்கபடி பேணாததும், பலவித துர்ராசாரங்களின்மேல தங்களைக் கெடுத்துக்கொள்வதுமேயாம். அறியாமையும், அவாவும், சோம்பலும் மனுஷனைக் கொல்லுகிறதென்று பெரியோர் கூறுகிறார்கள். தேகமும், மனமும் சுத்தமாயிருந்து அவைகளுக்குரிய விதி விலக்குகளைக் கிரமமாய்க் கைபாடிவந்தால் அதுவே மானிட ஜீவன்

நிலைத்திருக்க மருந்தாம். "காய கற்பந்தேடி நெஞ்சம் புண்ணாவோரெல்லாம்" கையாடவேண்டிய காய கற்பமிது தான்."

"ஆகவே மனுஷனே! நீ யிவ்விடத்தில் கூறப்படுகிற விதிகளைக் கைக்கொள். விலக்குகளை நிவர்த்தி செய். நீ உலகத்தில் நீடிய ஆயுளைப் பெற்றிருப்பாய். அறிவும், விவேகமும் அடைந்திருப்பாய். நல்ல சந்தானங்களைப் பெற்றுச் சந்தோஷமாய் வாழ்நாளைச் செலவிடுவாய். நீடிய ஆயுளுக்கும், சந்தோஷ ஜீவியத்துக்கும் இவைகளே ஏற்ற புத்திமதிகள்."

(இன்னும் வரும்)

---

## திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரஸ்வாமி மகோத்ஸவச் சிறப்பும் ஷை ஆதீன குருபூஜை வைபவமும்.

தீர்த்தம் க்ஷேத்ரம் மூர்த்தி இம்மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளதும், சைவசமயாசிரியர்களால் பாடல் பெற்றுள்ளதுமான திவ்யக்ஷேத்திரமாகிய பிப்பிலாரண்ணியமென்னும் திருவாவடுதுரையில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அதுல்யகுச நாயகி சமேத ஸ்ரீ கோமுக்தீஸ்வரஸ்வாமிக்கு பிரதி வருடமும் பிரம்மோத்ஸவம் நடைபெறுவது இயல்பேயாகினும் இவ்வருடத்தில் நடைபெற்ற இம்மஹோத்ஸவத்தின் சிறப்பை ஆதிசேஷனாலும் எடுத்துச் சொல்ல ஏலாதெனின் எம்மால் எங்ஙனம் எழுதக்கூடும். இவ்வருடம் இவ்வுத்ஸவத்தை இத்தனை சிறப்புடன், சரீரசிரமத்தையும், பொருட்செலவையும் பொருட்படுத்தாது நடப்பிவித்ததானது திருவாவடுதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பண்டார சன்னதியவர்களின் பக்தி சிரத்தையே காரணமெனப் பகருவோம். இற்க, ஸ்ரீகைலாச பரம்பரை திருவாவடுதுரை ஆதீனம் 18-வது பட்டம் வகித்து வரும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பண்டார சன்னதியவர்கள் ஷை ஆதீன குருபூஜையை (5–2–11-ல்) வெகு பக்தி சிரத்தையோடு செய்துமுடித்து பிராமணர்களுக்கு தக்ஷிணையுடன் அன்னமளித்தும், இரவு ஸ்ரீ கோமுக்தீஸ்வரரை தரிசனம் செய்துகொண்டு ஸ்ரீ ஆதி நமசிவாய மூர்த்திக்கு பூஜை முதலானதும் செய்துமுடிந்தபின் பந்திபோஜனம் செய்விக்கப்பட்டது அதன் பிறகு, எண்ணற்ற எடுபிடி சாமான்களுடனும், யானை, குதிரை, ஒட்டக முதலியவற்றுடனும், பலவிதமான வாணவேடிக்கைகளுடனும், எண்ணற்ற வாஷிங்டன் விளக்குகளுடனும், பல ஜோடி

மேளக்கச்சேரிகளுடனும், அரண்மனை பாண்டு வாத்தியங்களுடனும், பஜனைகோஷ்டிகளுடனும், அழகிய கார்ச்சிப்பட்டு விரித்த தந்தப் பல்லக்கின் மீது ஸ்ரீ பண்டாரசன்னதியவர்கள் பவனி வந்த சிறப்பும், அப்பல்லக்கின் இருமருங்கிலும் இராமனுதபுரம் ராஜா ஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத ராஜ சேதுபதி மகாராஜா அவர்களும், அவர்கள் சகோதரமும், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும், சுதேச கனதனவான்களும், மற்ற எண்ணற்ற ஜனங்களும், பின் தொடர்ந்து சென்ற காக்ஷி கண்டோர்க்கன்றி காணுதார் கனவிலும் கண்டிரார். ஸ்ரீ பண்டாரசன்னதியவர்கள் கொலு மண்டபம் வந்து சேர்ந்ததும் அவருக்கு அலங்கார முதலியன செய்வித்து சோடச உபசாரங்கள் நடைபெற்றபோது, அருகிலிருந்தோர் கண்டு ஆனந்திப்பதைப் போல் தானும் கண்டு களிககக் கருதியே போலும் வான முகட்டில் சூரியன் எழுந்தான். ஆதவன் உதயம் ஆனுகினதால் தாமரையும் மலர்ந்தது. காலை, ஸ்ரீ சன்னிதானம் அவர்கள், அவரவர்கள் அபேக்ஷைப்படி சன்மானம் செய்கதைப் பார்த்தால் § பாரியே மீண்டும் பாரினில் இவ்வடிவந்தாங்கி வந்துற்றுனேவென பார்த்தோர் பிரம்மிக்கும்படியாய் இருந்தது, கொடையும் தயையும் பக்தியும் ஒருங்கே அமையப்பெற்ற ஸ்ரீ மஹா சன்னிதானம் அவர்கள் நீடிய ஆயுளும் பூரண சுகமும் பெற்று வாழுமாறு எல்லாம் வல்ல சிவபிரான் திருவருள் புரிவாராக.

---

## விகடக் கோத்து. (JOLLY BITS.)

ஆல்ரயிட், ஆதாபரஸ், குட்மார்னிங், ஜெயசிதாராம், என் அன்பர்களே கேளுங்கள், நான் என் அன்னை வயிற்றிலிருந்து சென்னையிலுதித்த நாளாய் என் மென்னையில் என்னமோ மாட்டிக்கொண்டதென்ற ஓர் நம்பிக்கையின்பேரில், வைத்தியனிடம் சென்று கண்ட ஔஷதங்களை அருந்தி பார்த்தும் சௌக்கிய மாகாது கைலாயம் சென்று அகஸ்தியரைக் கண்டு அருமாமுனி வேரையுண்டுபட்ட அவஸ்தையிலிருந்து விண்டு, சிறிது நேரம் வார்த்தையாடிவிட்டு அகவிலையின் அனியாயங்களை அவரிடம் கூறினேன். அவர், ஐயா விகடனுரே! உம்முடைய பெயரின் முதலெழுத்தை எடுத்து விடுவதாலுண்டாகும் அவஸ்தையில் நீரிப்போது வாதைப்படுவதால் அகவிலையின் பாரம் வெகுவாய்த்

---

§ பாரி தமிழ் வள்ளல்களிலே இவனையே முதல்வனுகச் சொல்லல் தகும். எத்தனையோ வள்ளல்கள் முன்னுளில் விளங்கியிருப்பினும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் தாம் பாடிய திருப்புகலூர் திருப்பதிகத்தில் "கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று தம் அருமைத் திருவாக்காற் சுட்டப்பட்டவன் இவனே.

தோன்றுவது இயல்புதான், உமக்கு திருப்தியுண்டாகும் பொருட்டு நீர் உலகத்தைச்சுற்றி உத்தமப் பொருள்களையும் குறித்துக்கொண்டு உலகெல்லாம் உலாவிவரும் உண்மை சமாச்சாரங்களடங்கிய உன்னத பத்திரிகையாகிய "வைத்திய போதினி"க்கு எழுதும் உலகோர் அறியட்டும், துணை வேண்டுமாயின் நாரத மாமுனியைக்கூட அனுப்புகிறேன் என்றார். ஆல்ரயிட் தேட்ஸ் வேல் அண் குட் என்றேன். தற்காலத்தில் உலகத்து சமாசாரங்களை ஒரு நொடியில் பாக் பண்ணி ஊரூராயனுப்பும் ராய்டர் துரைகூட இவருக்கு நிகராகமாட்டார். எதொன்றையும் ஆரத் தீர ஆலோசித்து உண்மையையே உரைப்பார். அது அப்படியிருக்கட்டும் இது இப்படியிருக்கட்டும் நான் கண்ட விசேஷங்களை கூறுகிறேன் கேளுங்கள்:—

நிவாடாவில் ஆல்பைன் சுரங்கத்தில் சென்றவருஷம் டிசம்பர்மீ வேலைசெய்துகொண்டிருந்த 3-ஆள்கள் 1000-அடி ஆழத்தில் திடீரென மலை பெயர்ந்தகால் புதைவுண்டார்கள்; அவர்களை ரக்ஷிக்கும் பொருட்டு வேலை செய்தார்கள். அவர்கள் வெளியில் வருவதற்கு இன்னும் சுமார் 4-வாரங்கள் செல்லுமெனக் கருதப்பட்டபின் இதன் மத்தியில் டெலிபோன் மூலமாய் யிவர்கள் க்ஷேமத்தையறிய முயற்சித்தபோது நாங்கள் சௌக்கியமாய் இருக்கிறோம் என்னும் பதில் கிட்டிற்றாம். இவர்களுக்கு அளவில்லாத அன்னபானாதிகள் பம்புகளின் வழியாய் அனுப்பினார்களாம். வெளியிலிருப்பவர்கள் புதைபட்டவர்களுக்கு பாட்டுகளும் உல்லாச வாத்தியங்களும் கம்பிகளின் —(wire)வழியாய் அனுப்புவதுமன்றி யிவர்கள் யிரண்டு கக்ஷியாருக்கும் சரசப் பேச்சுகளும் நடமாடிக்கொண்டிருந்தனவாம். கலியுக ராஜனின் திருவிளையாடலோ மற்றென்னவோ கடவுளுக்கேவெளிச்சம்.

மிஸ்டர் விட்னி என்னும் பேர்போன கோடீசுவரப் பிரபு நியுயார்க் என்னும் பட்டணத்தில் தன் படுக்கையில் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு தற்கொலை புரிந்துகொண்டாராம். இவர் அமெரிக்காவில் கண்டவர்கள் கண்ணியம் செய்யும்படி உதித்த உத்தமப் பிரபுவாம். செல்வமகிமையால் இந்தியா சக்கிரவர்த்தியும் இவருக்கு நட்பினர்களாம். வியாபாரத் துறையிலுண்டான நஷ்டம் துரையவர்களை வைகுண்டத்திற்கு அனுப்பிற்றாம். ஐயோ பாவம்! அந்தோ பரிதாபம்!

புகை ரதம்:—ஆசியா கண்டத்துக்கும் ஐரோப்பாவுக்கும் பெர்ஷியா ஆப்கானிஸ்தான் வழியாக புகைரத பாதை ஏற்படுத்த எண்ணியிருக்கிறார்களாம். இது முடிந்தால் இங்கிலாந்திலிருந்து பம்பாய்க்கு 9-நாளிற் சேரலாம். இப்போது கப்பல் மூலமாய் 14-நாட்கள் செல்லுகிறது. இதுவும் ஓர் விந்தையே!

## வைத்தியக் குறிப்புகள்.

**காதில் சீழ் வடிதலுக்கு:**—சுக்கு, திப்பிலி, கோஷ்டம், சயிந்திய லவணம், முத்தக்காசு, உள்ளி, கசூர்க்காய், வசம்பு, வகைக்கு ஒரு உழுந்திடை எருக்கிலைச்சாற்றாலரைத்து வேப்பெண்ணெயிற் கலந்து காய்ச்சி காதில் விட்டுப் பஞ்சடைக்கத் தீரும்.

---

**மற்றொரு விதம்:**—முருங்கை வேர், முத்தெருக்கஞ்செவி யிலை, பூண்டு, வசம்பு இவைகளை யோர்நிறையாய்க் கள்ளிப்பழுப்புச் சாற்றாலரைத்து நல்லெண்ணெயிற் கூட்டி எரித்து காதிலடைக்க மாறும்.

---

**காதில் ஈ புகுந்தால்:**—குப்பைமேனியிலையிற் சிறுநீர் (மூத்திரம்) விட்டுக் கசக்கிக் காதிற் பிழிய ஈ செத்து விழும். குப்பைமேனிச் சாறும், கோழியவரைச்சாறும் சமனாய்க் கூட்டி காதில் விட்டிடில் ஈ சாகும்.

---

**காதில் சீழ்வடிதலுக்கும், குத்துவலிக்கும் இங்கிலீஷ் முறை:**—க்ளிஸிரைன் 4 டிராம், (Glycerine, 4 Dram) டிஞ்சர், ஓப்பியம் 4-டிராம், (Tinct opii. 4 Dram) இவ்விரண்டையும் ஒன்று கூட்டி சவுக்காரம் (Soap) கூட்டிய வெந்நீரினால் காதை சுத்தம் செய்து ஷை மருந்தில் 10, 12, துளி காதில்விட்டு பஞ்சடைக்கவும்.

---

**கருஞ்செம்பை:**—இந்த இலையை வதக்கி வீக்கங்களுக்கு வைத்துக் கட்டலாம். கருஞ்செம்பைரசம், வெள்ளைப்பூண்டுரசம், நல்லெண்ணெய் இவைகளை சமனாய்க்கூட்டி, எரித்து தைல பதத்தில் வடித்து வாத ரோகங்களுக்கு மேற்பூச்சாக பூசிவர சுகுணமுண்டாகும்.

---

**கருவேலம்பிசின்:**—இதை வஸ்திரகாயம் செய்து வெள்ளைச்சருக்கரை சமனிடை கூட்டி வேளை ஒன்றுக்கு 10, 12, உளுந்து நிறை கொடுக்க. இருமல், ரக்த பித்த ரோகங்கள், சீதபேதி, அதிசாரம், வயிற்றிலுள்ள விரணம் இவைகள் தீரும்.

---

**கருவேப்பிலை:**—இந்த இலை உலகப் பிரசித்தமானது போஜன பதார்த்தங்களுடன் சேர்ப்பது வீட்டு வழக்கம். இதை தாகம், பித்த தோஷம், வாந்தி அரோசகம், சுரம், வயிற்றுவலி, அஜீரணபேதி இவை முதலியவைகளுக்கு 2-விராகநிறை கருவேப்பிலையை அரைப்படி வெந்நீரிலிட்டு மூடி 4-மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி, வேளை ஒன்றுக்கு $\frac{1}{8}$ அல்லது $\frac{1}{4}$ ஆழாக்கு வீதம் கொடுத்துவரவும்.

---

**சர்க்கரை:**—பலத்தையூட்டுவதிற் சர்க்கரை சிறந்த பண்டமென்று இப்போது ரூபகாரமாயிருக்கின்றது, யுத்தகளத்திலிருக்கிற ஜர்மன் போர்வீரர்களுக்குரிய ஆகாரத்திற் சர்க்கரையுமொன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது, மேலும் அதிகமாய்ச் சர்க்கரை சேர்ந்த பண்டத்தைச் சாப்பிடும்போது மஸ்துண்டாக்கும் படியான வஸ்துக்களின்மேல் விருப்பங் குறைந்து போகிறதென்றுஞ் சொல்லப்படுகிறது.

பானம்:—வெந்நீரூற்றி மூன்று நிமிஷத்தில் தேயிலையை எடுத்து விடுதல்வேண்டும், அடிக்கடி தேத் தண்ணீர் குடிப்பது மிகவுங் கேடு. ஐயர்லாந்தில் அநேகர் பயித்தியம் கொள்வது அடிக்கடி தேத்தண்ணீர் குடிப்பதினுலென்று ஒரு பத்திரிகை கூறுகின்றது. மனுஷருடைய ஆயுளைக் குறையச் செய்து ஜனப்பெருக்கத்தைக் குறைப்பதற்குக் கடவுளாற் கொடுக்கப் பட்ட அமைதியான பிளேக் வியாதியைப்போன்றது தேத் தண்ணீர், காப்பி இரண்டுமெனப், பேர்வாய்ந்த டாக்டர் லிஸ்டர் கூறுகின்றார்.

## வர்த்தமானங்கள்.

யானையின் தோல்:—யானையின் தோலை வேலைகளுக்கு உபயோக படுத்துகிறார்களாம். இத்தோலானது இரண்டங்குலம் கனமுள்ளதா யிருக்கிறதாம்.

தங்கச் சுரங்கம்:—ஆஸ்திரேலிய நாட்டு தங்கச் சுரங்கத்தில் கடந்த டிஸம்பர்மீ கிடைத்த தங்கத்தின் நிறை 475-அவுன்ஸ் நிறையுள்ளதாம்.

கப்பற்சேதம்:—சென்ற டிசம்பர்மாதம் காய்பியன் கடலில் உண்டான புயலினுல் 26-கப்பல்கள் நாசமாயினதுடன் 314 ஜனங்களும் பிராணனை இழந்தார்கள்.

சுரங்க விபத்து:—லங்காஷயரில் சுரங்கமொன்று வெடித்த தினுல் 300-வேலைக்காரர் உள்ளே அகப்பட்டார்களாம். தீயும் பற்றியதால அவர்கள் இறந்திருக்கலாமென் றெண்ணப்படுகிற தாம் 40-பிரேதங்கள் வெளியாக்கப்பட்டனவாம். அநேகோ பரிதாபம்!

பிளேக்:—சேலத்தில் இந்நோயின் கடுமை சற்று தணிந்து வருகிறது. ஜனங்கள் இப்போது குடிபேறுகிறார்கள். இன் னும இரண்டொரு வாரத்தில் இந்நோய் தொலைந்து விடக்கூடு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரையில் இந்நோயினுல் 1574-பேர் மாண்டனர்.

உக்கிரமான பூகம்பம்:—துருக்கிஸ்தான் தேசத்தில் வயியர்னில் என்னும் பகுதியில் இம்மாதம் 4-ம் தேதி 5 நிமிஷ அளவில் பூமி யதி ர்ச்சியுண்டானது. பயங்கரமான விபத்துக்கள் நேர்ந்தன. கல்லினுற் கட்டப்பட்ட வீடுகள் கிட்டங்கிகள் குலுங்குதலில் சாய்ந்தன 22½ டிகி ரீக்கு உறைந்த பனி வீழ்ந்து மூடியது உயிர்ச்சேதங்களைப்பற்றி நிச்சய மாக இன்னும் அறியப்படவில்லையாம்.

பறங்கிப்பேட்டையில் பல ஆண்டுகளாக ஆயுர்வேத அவுஷத வியாபாரம் செய்துவரும் மிஸ்டர் பி. சுப்பராய் அவர்களுடைய உத்கிருஷ்டமான அவுஷதங்களுக்காகவும் உத்தமமான வாசனைத் திரவியங்களுக்காகவும், கொட்டக்கல் என்னுமிடத்தில் நடந்தேறிய பொருட்காட்சியில் ஓர் வெள்ளிப் பதக்கமும் நற்சாக்ஷி பத்திரமும் அளிக்கப்பட்டிருப்பதுமன்றி, ஓசீரா என்னுமிடத்தில் நடந்தேறிய பொருட்காக்ஷியிலும் மற்றொரு வெள்ளிப் பதக்கமும் பணமும் பரிசளிக்கப்பட்டதாம்.

## விசித்திர விஷயங்கள்.

நடக்கிற மீன்கள்:—சில மீன்கள் நடக்கிறதாக ஒரு சாஸ்திரி சொல்லுகிறார். அவைகள் ஜலத்தில் நாற்கால் ஜீவன்போல் நடந்து மற்ற மீன்களைப் பிடித்துத் தின்கிறது. இவற்றிற்கு தொட்டி மீன் என்று பெயராம்.

லண்டன்நகரிலுள்ள அநேகம் ஷாப்புகளில் ஒருவிதமாய் அலுமாரிகள் செய்துவைத்திருக்கிறார்கள். கள்வர்போய்க் கதவுகளைத்திறந்தால் உடனே அக்கள்வரின் சாயல் கதவுகளில் அமைந்துவிடுமாம். அப்பிரதிமைப் படத்தைக்கொண்டு கள்வர்களைப் பிடிக்கக்கூடுமாம்.

புகைவண்டியை வெற்றிகோள்ளல்:—ஜர்மன் தேசத்தில் ஒருவர் பைசிக்கல் வழியாக புகைவண்டியோடு எதிர்த்து ஓடி 10-நிமிஷத்துக்கு முந்தி குறித்த இடத்தைச் சேர்ந்து புகைவண்டியை வெற்றிகொண்டார். பைசிக்கல் $11\frac{1}{4}$-மைலை 15-நிமிஷத்துள் தாண்டியது.

ஆமை:—இதன் சிரசைத் துணித்த பின்னரும் அது 24-மணி நேரத்தில் 200-கெஜ தூரம் நகர்ந்து போகுமாம். அதன் ஈரலையெடுத்து வெளியில் தூக்கி வைத்தால் அது பல நாட்களுக்குத் துடித்துக்கொண்டிருக்குமாம். இதனால் மூளையே உயிர்க்கிருப்பிடம் என்பது அறியவேண்டியது.

ஆகாயக் கப்பல்:—பெங்களூரில் நடந்தேறிய ஆகாய விமானக்காக்ஷியை 25,000 ஜனங்கள் பார்த்துச் சந்தோஷித்தார்கள். மாலை 5-மணிக்குப் பிறகு சூரியாஸ்தமனமாகும் சமயத்தில் பாரான்டிகேடர்சு அவர்கள் தமது ஆகாய விமானத்திலேறி விட வடமேற்குப் புறமாய்க் கிளம்பினர். வட்டமாய் 200-கஜ தூரம் போய்த் திரும்பித் தரைக்கு வந்து மறுபடியும் எழும்பினர். பிறகு மிஸ்டர் லோகன், மிஸ்டர் வில்லிஸ் இவ்விருவரையும் எற்றிக்கொண்டு பாரன் அவர்கள் திரும்பவும் மேலே வட்டமாய்ச் சுற்றிவந்தது நிரம்ப ஆச்சரியமாயிருந்தது.

மனிதருபமும் நாய்முகமும்:—ஆஷ்டிரேலியாவின் மேற்கு மாகாணத்தில் ஒரு தனவான் ஒரு நாடகப்பெண்மீது வெகு காலம் காதல்கொண்டிருந்து பின்னர் தன் மனோரதம் முற்றுப்பெறவே, இருவருங்கூடியிருக்குங்காலத்துத் தமக்கெதிரில் தங்கள் நாய்களுங் கூடிக் களிப்பதாயின, அந்த நாய்களின் லீலையைப் பார்த்தவாறு தாமுங் காமமீறி உற்சாகமாயிருந்தனர், அது தொடங்கி அப்பெண் கற்பவதியாகி உச்சி முதல் நாபிவரை நாயுருவமும், தேகமுழுவதும் மயிர் அடர்ந்துமுள்ள ஒரு குழந்தையை வெகு வேதனையோடு பெற்றனள் அது இறந்து போயிற்று.

**நாய்கள்:**—பிரான்சில் பட்டாளப்பகுதியில் நாய்கள் வளர்க்கப்படுகின்றன. போர்க்களத்திற் காயமடைந்து பிரக்ஞையற்றுக்கிடக்கும் போர்வீரரை அந்நாயிகள் தேடிச்சென்று, அவர்களைத் தொந்திரவு செய்யாமல், அவர்களிடத்திலுள்ள ஏதும்பொருள்களைச் சின்னமாகக்கருதிக் கவ்விச் சென்று, படைவகுப்புத் தலைவரிடம் கொடுக்கும்போது, அப்பொருள் எந்தப் படைவீரனது என்பதையும், அவன் போர்க்களத்தில் உதவியின்றிக் கிடக்கிறானென்பதையு மறிந்து, அவர், உடனே அவ்வாபத்திலகப்பட்டோர்க்கு வேண்டிய உதவி செய்வாராம். நாய்கள் மனுஷருக்குப் பலநன்மைகளைச் செய்கின்றன.

---

**கப்பலோ சிற்றூரோ:**—இதற்குமேல் பெரியதும் சமானமானதுமில்லையெனச் சொல்லத்தக்க ஓர் பெரியமரக்கலம் புதிதாய்ச் சீமையில் அமைக்கப்பட்டிருக்கிறதாம்: இதைச் சமுத்திரத்தில் நினைத்தவிடத்துக்கு ஊர்ந்துசெல்லும் ஓர் சிறிய தீவென்றே சொல்லலாம்: இம்மரக்கலத்தில் 650 முதல் வகுப்புப் பிரயாணிகளும் 740, 2-ம் வகுப்புப் பிரயாணிகளும், 2400, 3-ம் வகுப்புப் பிரயாணிகளுமாக 3790 ஜனங்கள் குடியிருக்கத்தக்க வசதிகளும், நீந்தும் குளமொன்றும், குளிப்பதற்கு ஸ்நானக்கட்டிடமொன்றும், நாடகசாலையொன்றும் இருக்கின்றனவாம்: அதன் கிரயம் இருபது லட்சம் பவுன், அதாவது மூன்று கோடி ரூபாயெனச் சொல்லப்படுகிறது.

---

**சிசுவை விழுங்கிய மீன்:**—மலையாளத்திலுள்ள பள்ளிபுரம் என்னும் ஊரில் சில வலைஞர் ஒன்று சேர்ந்து வலைபோட்டு மீன் பிடித்தபோது ஒரு பெருத்த மீன் அகப்பட்டது அதை வெகு சிரமப்பட்டு வெளியில் இழுத்து அறுத்தார்கள். ஆ! ஆ!! அவர்கள் ஆச்சரியத்தை என்னவென்று சொல்வது!!! அந்த மீனின் வயிற்றில் யாதொரு காயமும் இல்லாமல் ஒரு பெண்சிசு காணப்பட்டது. அதற்கு 3-வயதிருக்குமாம். சிசு தண்ணீரண்டைபோய் இருக்கும்போது அந்த மீன் அந்தச் சிசுவை விழுங்கியிருக்கவேண்டுமென்று ஊகிக்கப்பட்டது. 3-வயது காலம் வளர்த்த புத்திரியை, கேவலம் மீனுக்குப் பறிகொடுத்த பெற்றோர் இன்னாரென்பது புலப்படவில்லையாம்.

---

**ஜெந்துஉற்பவம்:**—டிலீச் என்னும் பெயரையுடைய சாஸ்திரியாரொருவர் முட்டையிலிருந்து குஞ்சுகளுண்டாகும் விதத்தை மிகுநுட்பமாயாராய்ந்து, அத்தொழிலை யியற்றற்கேற்றவோர் இயந்திரத்தை யமைத்து, சிருஷ்டிகர் தொழிலை நடத்தத்தொடங்கி யிருக்கின்றாராம். தற்போது இவர் பிரயாசத்தின் பெறுபேறாய் நான்கு சமுத்திர ஜந்துக்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றனவென்று சில பத்திரிகைகள் கூறுகின்றன, அவை மற்றும் பிராணிகளைப்போற் சீததத்துவ முடையவைகளாய் நகரக் கூடியவைகளாயும் சுவாசிக்கக் கூடியவைகளாயும் இருக்கின்றனவாம், ஆயினும் ஆகாரமேற்குந் திறமில்லையாம். இதன் காரணத்தைச் சாஸ்திரியார் பூதக்கண்ணடி கொண்டு ஆராய்ந்து அவற்றிற்குச் சீரண வுறுப்புகளில்லையெனக்கண்டு, அக்குறை நிவர்த்திக்க அதிக பிரயாசமெடுக்கின்றனராம்.

# புத்தக வரவு.

ஸ்ரீகிருஷ்ண சைதன்யஸ்வாமிகள் சரித்திரம்:—இவ்வரியபுத்தகமானது உலகமெங்கும் பிரக்யாதியடைந்த அமிர்தபஜார் பத்திராதிபராகிய ஸ்ரீஜத்பாபு சிஷிர்குமார் கோஷ் அவர்கள் ஆங்கிலத்தில் வரைந்து உலகமெங்கும் பரவச்செய்த இவ்வுத்தம நூலை ஆங்கிலமறியாத நந்தமிழ்நாட்டுச் சகோதரர்களும் அறிந்து ஆனந்திக்குமாறு சென்னையிலுள்ள ஸ்ரீபக்தவத்ஸலம், பி ஏ. ஸ்ரீவேங்கட ஸ்ரீனிவாஸன் என்ற இவ்விரு கல்விமான்களும் ஒருங்குசேர்ந்து செந்தமிழ் நடையில் தமிழர் சுவைக்கேற்ப ஆங்கில நூலை அக்கித்தந்தமையால் மிகுதியும் ருசிக்கின்றது. இந்நூலில் நிரம்பித்ததும்பும், பக்திரசமும், நடைப்போக்கும் நடையழகும் மனத்தைக்கவர்கின்றது. இவ்வருமை வாய்ந்த பக்திநூலை நந்தமிழ்நாட்டில் சிறுவர் முதற பலரும் வாங்கிப் படித்தால் விரிந்து பரந்த ஸ்ரீகிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகளின் உண்மைப்பெருமைகள் எளிதில் விளங்கும், இந்நூலின் பெருமைக்கேற்க இதன் வெளியழகும் கண்ணைக்கவர்கின்றது. இப்புத்தகத்தின் பிரதி ஒன்றை எம்மீதன்புகூர்ந்தனுப்பிய நூலாசிரியரவர்களிடத்து நன்றியறித லுடையேம். இதன் விலை ரூபா 2, வேண்டியவர்கள் சென்னை விவேகானந்த பிரசுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

---

பறக்கை பிரம்ம ஞானமடத்தின் அறிக்கைப் பத்திரம்:— திருவிதாங்கூரைச் சேர்ந்த பறக்கை என்னும் கிராமத்தில் ஸ்ரீமத், எஸ், பி, பெருமாள் பிள்ளை அவர்களால பிரம்ம ஞான மடம் என்னும் நன்னுமத்தோடு ஓர் மடம் ஸ்தாபிதஞ் செய்யப் பட்டுள்ளது. இம்மடத்தின் நோக்கமாவது, வேதாந்த விசாரஞ் செய்தல், சாதுக்களுக்கும் ஏழைகளுக்குமன்னமளித்தல், இந்து மதவறிவை பிறருமறியும்படி தூண்டுப் பத்திரிகைகள் பிரசுரித்தல், ஆயுர்வேதவிதிப்படி வியாதிகளைத் தீர்த்தல், இத்தகைய தருமங்கட்கும், மற்றுமுள்ள சிலவுகட்கும், தரும சிந்தை கொண்ட கனதனவான்களின் பேருதவியைக்கொண்டே நடை பெற்றுவருகின்றது. இம்மடமானது மென்மேலு மபிவிருத்தியாகி, நம்மவர்கள் ஞானரகசியங்களை அறிந்து ஆனந்திக்குமாறு தர்ம சிந்தையுள்ள கனவான்களின் ஆதரணையு மெதிர்பார்க்கப் படுகிறது, இம்மடத்தின் அபிவிருத்தியைக் கருதிய பத்திராதிபர்கள் தாம் தாம் இயற்றிவரும் பத்திரிகையின் பிரதி ஒன்றை இலவசமாய் இம்மடத்திற்கனுப்பி உதவி புரிவது உத்தமமாகும்.

கோஹ சாஸ்திரம்:—இப்புத்தகம் சிற்றடக்கமுள்ளதாயிருப்பினும் இதில் தெய்வ வணக்கம், ஸ்திரீ புருஷ வருண நிர்ணயம், ருதுகால பலன், விவாக சம்பந்த விதிகள், மருத்துவ சாஸ்திரம், ஸ்திரீ புருஷ மலட்டு விபரம், நபுஞ்சகத் தன்மை முதலிய ஏழு அத்தியாயங்களுடன் பாமரர்களுக்கும் பயனளிக்கக் கூடியதாய் அநேக உபமான உபமேயங்களுடன் ஸ்ரீஜத் கெங்கா பிரசாத் பண்டிதரவர்களால், வடமொழியிலிருந்து தென் மொழியில் வரையப்பட்டுள்ளதானது ஒரு பெருஞ் சிறப்பைத் தருகின்றது. இப்புத்தகம் தமிழறிந்த ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களிடத்தும் இருந்து பயனளிக்கத் தக்கது என்னலாம். இப் புத்தகத்தின் பிரதி ஒன்றை நம்மீ தன்புகூர்ந் தனுப்பிய பண்டிதரவர் களுக்கு நமது மனப்பூர்வமான வந்தன மளிக்கின்றோம். இதன் விலை ரூபா 3—0—0 தான். இப்புத்தகம் வேண்டியவர்கள், கொழும்பு புதிய சோனகத்தெரு, ஸ்ரீஜத் கெங்கா பிரசாத் பண்டிதரவர்களிடம் பெற்றுக் கொள்ளவும்.

---

## விடுகதை வினா.

### ஆசிரியப்பா.

இருமைகொண் டிலகு சந்திர சேகரப் பெயர்கொள்
இப்பத்தி ராசிரியரால்
இசையுமிவ் வுலகிலுள மானவ ரெவர்க்குமிங்கு
இனிதாயளிக்கு மியல்சேர்
ஒருமை திகழொன்பா னெழுத்தினைக் கொண்டபதம்
ஒன்றிரண் டியர்மழைப் பேர்
ஓதவரு மூன்றுட னிரண்டுவிண் டுவிணுமம்
உற்றவைந் தெட்டொன்பதும்
கருமைநிற மூறுபறவை யாமைந்து மேழும்
கதித்த வித்தாகுமைந்துங்
கணிகொளு மிரண்டு முற்காலத்து வள்ளலார்
களிலொருவர் பெயர் மூன்றுடன்
அருமையுறு நான்கு சிறுதுகளாகு மாறிரண்டு
அலைகடற் பெயராகுமால்
அன்புடன் கண்டிதற் கான விடைபகருவீர்
அமுதகவி நாவலீரே!

---

## கணித வினா.

ஒரு பிரபுவானவர், தனது வேலைக்காரனிடம் நூறு ரூபாய் கொடுத்து பழவர்க்கங்கள் வாங்கிவரும்படி அனுப்பினார். அவன் அவ் வூர்ப்பழக்கடையடைந்து நோக்க அவ்விடத்தில் மாம்பழம், மாதுளம் பழம், கொய்யாப் பழம் ஆகிய இம் மூன்றுவிதப் பழங்களே இருந்தன. வேலைக்காரன் ஒவ்வொரு பழங்களின் விலை என்னை யென்க, பழக் காரன் ஒரு மாம்பழம் நான்கு ரூபாயாகவும்; ஒரு மாதுளம் பழம் ஒரு

ரூபாயாகவும்; ஒரு கொய்யாப் பழம் நான்கணுவாகவும்; தெரிவித்தான் உடனே வேலைக்காரன் நூறு ரூபாயையும் கொடுத்து அம்மூன்று விதப் பழங்களும் சேர்ந்து நூறு பழம் வாங்கினான். மேற்கூறிய விலைப்படி கணித்துப் பார்க்க நூறு ரூபாய்க்கும் நூறு பழத்திற்கும் சரியாய் இருந்தது. இப்படியானல் மேற்கூறிய மூன்றுவிதப் பழங்களில் ஒவ்வொரு விதத்திலும் எத்தனை பழம் வாங்கியிருப்பான் என்பதை உன் நண்பரிடம் உணர்ந்து விடை யுரைப்பாய். உயர்வுப்கு வைத்தியபோதினிப் பெயர் கொள் ஒயிலான பெண்மயிலே!

இங்ஙனம்,

மா. வே. சோணமுத்து ஆசாரி,

மார்க்கயன்கோட்டை.


## ADVERTISEMENTS.



## MOTO REVE.

1½—H. P. உள்ள மோடார் சையிகிள்களுக்குள் மோடோ ரீவ் தகுந்த மேன்மையுள்ளது. என்னவென்றால், இதின்கனம் பவுண்டு 78-தான். அதாவது சாதாரண மோடார்சையிகிளுடைய கனத்தில்பாதிதான் ரோட்டில் போகும்பொழுது சப்தமில்லாமலும் ஒரு காலன் எண்ணெய்க்கு சுமார் 140 மயில் போகிறதாயும், அதாவது சாதாரண வண்டிக்கு வரும் எண்ணெயில் பாதியிருந்தால் போதும். வண்டியை ஸ்டார்டு (Start) செய்கிறதில் பிரயாசம் இல்லாமலுமிருக்கிறது.

இதர விபரங்களுக்கு எழுதிக்கொள்ளவும்.

**K. S. ராஜ் & Co.,**

கும்பகோணம்.

---

## 1890-வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.

மருந்து குணமில்லாவிடில் பணம் வாப்சு.

யானைக் காலுக்கும் நீர்ச் சூலை முதலானவைகளுக்கும் டாக்டர் கோவின் கைகண்ட மருந்து. எவ்விதமான வியாதியையும் சொஸ்தம் பண்ண உத்தரவாதம். ஸர்டிபிகேட்டுகள் ஏராளம். ஒரு அவுன்ஸ் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0. 6-அவுன்ஸ் விலை ரூ. 12.

Apply to:—G. BROTHERS,
*No. 218, Cornwallis Street, Calcutta.*

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும்: 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணு; டெஜன் ரூ 4, வி. பி. சார்ஜ 1-முதல் 3-க்கு 4-அணு.

## ரோமப்பீசின்.

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதிசெய்யக்கூடியது ஒன்றும் இதில்கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணு; டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் 4-அணு.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி, வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச் சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு 1½-அணு டெஜன் 14-அணு1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணு,

Apyly to Messrs—J. SUR & Co.,
Patent Medecine Sellers & General order suppliers,
South Sinthee Road, P. O. (V) Cossipore, Calcutta.

**Agent, Lakshmivilasa Provident Institution Ld, Kumbakonam**

## பற்பொடியும் பவளச்சுன்னமும்.

இந்த சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பரம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவராமல் புதைபட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளின்படி வெளியிடத்துணிந்தோம். ஷெ பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினுல் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வருதல், புழுவெட்டு, ஜீவிஜிவிப்பு, கூச்சம், நடுக்கம், எகிறில் ஏற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல், பல்லரணை முதலான நோயை க்கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு. ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ் கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சுன்ன டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,
ஆயுள்வேத பண்டிதசாலை, ஆய்குடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.

## பூரணசந்திரோதயம்.

பிரதி ஆங்கிலமீ 15உ மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ் பத்திரிகை. சந்தா வருஷம் 1-க்கு ரூ 2. தனிப்பிரதி அணு 4.

ப. நாராயண அய்யர், B.A., B.L., F. T. S.
அ. ரங்கவாமி அய்யர், B.A., B.L., F. T. S. } பத்திராதிபர்கள்.